
# கன்னியாகுமரியில் சித்த வர்ம கருத்தரங்கு



**கன்னியாகுமரி, பிப்.15-**

கன்னியாகுமரி விவேகானந்தா கேந்திரத்தில் பாரம்பரிய சித்த வர்ம எலும்பு முறிவு கருத்தரங்கு நேற்று துவங்கியது.

மனிதனின் கை, தோள் போன்ற இடங்களில் உள்ள வர்ம புள்ளிகளின் முக்கியத்துவம், இவை பாதிக்கப்படும் விதம், நோய் தீர்க்க உதவும் உத்திகள், எலும்பு முறிவுகள், கைவலி உள்ளிட்ட பல நோய்களுக்கு வர்மம் பயன்படும் விதம், இவை தொடர்பான இரண்டு நாள் கருத்தரங்கம் கன்னியாகுமரி விவேகானந்த கேந்திராவில் நேற்று காலை துவங்கியது. வைத்தியர்கள், சித்தா டாக்டர்கள் கலந்து கொண்டனர். கருத்தரங்கில் வர்ம வைத்தியங்களின் செயல்விளக்கள் அளிக்கப்பட்டது.

ஏற்பாடுகளை கேந்திர டாக்டர் கணபதி செய்திருந்தார்.